REGD No M 4842

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

ர் 10. | 19-8-51 | இதழ் 8.

ால் திரிந்தது!—பானை உடைந்தது!

★

ஸ் கோட்டைக் கதவுகள் பரக்கத் திறந்து கிடந்தன!

ன் படைகள், தடையின்றி, வென உள்ளே நுழைந்தன!

ர் படையெடுத்தான்! வெகு எளிதில் வென் ழ்ந்தது பிரான்ஸ்! வெற்றிக் ாட்டினான்!

ம்போரிட்டது, ஆனால் ியை முறியடிக்க முடிய

ர் தன் படையெடுப்பைத் ங்கிவிட்டான் என்று பொழுதும் பிரான்ஸ் துடி யில்லை. அவன் நெருங்கிய , பிரான்ஸின் படைகள் ன, ஆடின, ஓடின—ஆனால் ில் ஓய்ந்தன! முடிவில் யைத் தோற்றுக்கிக் து பிரான்ஸ்.

ஸ், ஜெர்மனிக்குப் பணிந்

மக்கள், ஜெர்மானியரின் ளாயினர்!

டாவது உலக யுத்த சரித் நாம் காணும் புதுமை

, இச்சம்பவம், நமக்கு !

உலகிற்கே, விளங்காத வரிக்க முடியாத விசித் ய முடியாத ஆச்சரியம்!

பிரான்ஸ் தோற்றது — உலகம் முதலில் நம்ப மறுத்தது!

பிரான்ஸ், ஜெர்மனிக்கு முடி சாய்த்தது—இதனை அறிந்த உலக நாடுகள் ஆச்சரியக் கண்களை அகல விரித்தன! சிந்தனைக் காதுகளைத் தீட்டின!

பிரான்ஸ் தோற்றது — இதனை யாருமே ஏற்க முடியவில்லை!

வெற்றியும் தோல்வியும் சகஜந்தானே, பிரான்ஸ் தோற்றதில் விந்தையென்ன என்று வினா விடுக்க முடியும். ஆனால், அந்தக் கேள்விக்கு இடமில்லாத நிலையிருந்தது அன்று, பிரான்ஸில்!

ஒரு நாடு, இன்னொரு நாட்டைத் தோற்கடிக்கிறதென்றால், தோற்ற நாட்டில், துவளும் நிலை எல்லாத் துறைகளிலும் தவழ வேண்டும்!

ஆனால், இங்கு, அத்தகைய அவல நிலை, ஜெர்மனியில்! ஆனந்த அலை அடித்துக் கொண்டிருந்தது, பிரான்ஸில்!

அப்படியிருந்தும் தோற்றது பிரான்ஸ், ஆகவேதான் ஆச்சரியம் அளவை மீறுகிறது — அனைவரையும் அணைக்கிறது!

முதல் உலகப் போர் முடிந்த நேரத்தில், முன்னணி நாடுகளில் முதலாவதாகத் திகழ்ந்த நாடு! வர்சேல்ஸ் உடன்படிக்கையை வழியாக்கித் தந்த நாடு, பிரான்ஸ்!

அந்த உடன்படிக்கையின் வரிகளில் பல, பிரான்ஸ் பெற்றெடுத்த பெருவீரன் கிளமென்சோ வாய அசைந்தபடி நீட்டப்பட்டவை.

உலக சமாதான மாநாடு அவன் குரலின் எதிரொலியாகத்தானிருந்தது!

பணக்கார அமெரிக்காவும், பாரிலே புகழ் பெற்ற பிரிட்டனும் கூட, பிரான்ஸின் பின் வரிசையிலே நிற்கவேண்டியிருந்தன.

உடன்படிக்கை தந்த உடைமைகளாக, பல நாடுகள் கிடைத்தன, புதிதாக!

குடியேற்ற நாடுகளில் குதூகலிக்கத் தக்க முன்னேற்றம் காட்டினர்.

தோற்ற ஜெர்மனியின் காணிக்கையால், நாட்டில் புதிய நிலை உண்டாயிற்று.

பாரிலேயே, மிகவும் பலம்வாய்ந்த சேனையிருந்தது. உலகம் வியக்கும் நாவாய்ப் படையுமிருந்தது. அண்டை நாடுகள் அழுக்காறடையும் அளவு உயர்ந்த விமானப் படையும் இருந்தது.

பிரான்ஸின் பொற்காலம் நடந்துகொண்டிருந்தது, அட போது!

உன்னதக் காலத்தில் உலவிய நாடுதான், ஒரே வாரத்தில், அன்னியன் காலடியில் வீழ்ந்தது!

அடிமைப் படுத்திய நாடொன்றும், பிரான்ஸின் பீடுகளிலே ஏ

ரோஜா தோட்டத்திற்கு எருக்கன் பூ ராஜா!

ளையும் எட்டிப் பிடிக்கக்கூடிய நிலையில் இல்லை!

வெல்ல முடியாத படைபலம், வேண்டிய அளவு பணபலம், வியந்து புகழத்தக்க பரம்பரை வெற்றிச் சரித்திரமூலம் — இத்தனையுமிருந்தும் பிரான்ஸ் தோற்றது! இது தான் விந்தை!

இது விந்தை மட்டுமல்ல, விபரீத முங்கூட!

வீணனுக்கு, வீரன் அடிமையானான்!

கோட்டான், குயிலுக்கு ஆசானாய் விட்டது!

மந்தி, மயிலுக்கு நட்டுவனாகி விட்டது!

ரோஜா தோட்டத்தில், எருக்கன் பூ ராஜாவாகிவிட்டது!

பிரான்ஸ், ஜெர்மனிக்கு அடிமையாகிவிட்டது.

வெற்றி விருந்திலே மகிழ்ந்திருந்த பிரான்ஸ், தோல்வி விஷத்தின் நினைவுகூட இல்லாத பிரான்ஸ், பேரும், புகழும் மிகுந்திருந்த பிரான்ஸ் வீழ்ந்தது!

உலகம் கண்டு வியந்த மேகினாட் அரணைக் கட்டிக்காட்டிய நாடு, ஜெர்மன் வெறியர்களின் வேட்டைக் காடாகிவிட்டது.

புரட்சியால், புத்துலகத்திற்கு புதியதொரு பூரிப்பைக் காட்டிய நாடு, சுதந்திரம், சமத்துவம், சகோதாத்துவம், என்று உலகிற்கே உன்னத இலட்சியங்களை உரிமையாக்கிய பெருமைக்குரிய நாடு, பிரான்ஸ். அந்நாடு, அடிமையாகி விட்டது, இரண்டாவது உலகப் போரின் போது!

தங்கக் கொள்கைகளை தாணிக்கீந்த பொன்னாடு, நாவலரும், பாவலரும் போற்றும் நிலையிலிருந்த நன்னாடு, இதற்கீடு வேறில்லை யென்று பாடியாடிட வேண்டிய நாடு தோற்றது!

இரண்டாவது உலக யுத்த சரித்திரத்தில் ஆச்சரிய அத்தியாயம், மர்மப் படலம், விந்தைக் காண்டம் இது!

பிரான்ஸ் தோற்றது, அதற்குரிய காரணம் படைபலம் குறைவல்ல; [illegible]

பிரான்ஸின் உள்நாட்டு நிலைதான் காரணம்!

போர் ஆரவாரம் வெளியிலே கேட்கிற நேரத்தில், நாட்டிய அரங்கங்களிலே, கேளிக்கைக் கூடங்களிலே, மதுபான மண்டபங்களிலே, ஆனந்த அறைகளிலே, அந்தப்புரங்களிலே, மயக்கும்பானம் ஒரு கோப்பையிலேந்தி, மதுரமான கானத்திலே மூழ்கி, சுழலுங் கண்களால் சொக்க வைக்கும் சுந்தரிகள் அருகிலே அரசியல் சீமான்கள், கேலிபேசினர், போரை! அலட்சியப் படுத்தினர், அருகில் நெருங்கிக் கொண்டிருக்கும் யுத்த அனலை!

நாட்டையே, அடிமையாக்கும் பெருங்கேட்டை விளைக்கும் போரை, அப்படி அலட்சியப்படுத்தினர்!

ஏன் தெரியுமா? ஜனநாயகத்தின் உண்மையடிப்படைகள் செத்துக் கொண்டிருந்தன.

கணத்திற்குக் கணம், ஜனநாயக தத்துவங்கள் சாவைநோக்கி நகர்ந்து கொண்டிருந்தன!

காளான்கள் தோன்றுவது போல் கட்சிகள் மலிந்தன! கட்சிக் காய்ச்சல் அதிகரித்தது!

தனிப்பட்டோருக்கிடையே ஏற்படும் போட்டியும், பொறாமையுமே அன்றாட அரசியல் திருவிழாக்கள்! 'அவன் பெரியவனா இவன் பெரியவனா' என்பதே அரசியல் கோட்பாடுகள்! அதிகாரம் யார் கையிலிருக்கவேண்டும், யாருக்கு, யாரைவிட அதிக கௌரவம், இவைகளே, அரசியல் சூறாவளிகள்! இதற்காக நடைபெறும் அடிதடிகளே, நாட்டிற்காக அவர்கள் நடத்தும் அறப் போர்!

லஞ்சம், பொய், சூது, வஞ்சனை, சூழ்ச்சி, சுரண்டல், பித்தலாட்டம், ஏமாற்றம் இவைகளே அரசியல் ஞானகுருமார்கள்!

ஊழல்களை ஊராளத் தொடங்கி விட்டன.

குழப்பமும், குமுறலும் முடிசூடிக் கொண்டன.

கண்டை விழிகள் மூட்டிவிட்ட சண்டைகள் ஏட்டில் எழுத முடி[illegible]

விழி வெட்டால், பல அ[...] குழப்பங்கள் எழும்பிக் கொ[...]ருந்தன.

கனிமொழி பேசி, மனம் ம[...] வோரின் தலையீடில்லா நடவடி[...] நடப்பதே இல்லை.

வலுவற்ற திட்டங்கள்! [...]யில்லா கட்சிகள்! பொது நல[...]மில்லாதவர்கள் வெறியாட்டம்[...]தக் கூட்டுச் சரக்கே, பிரான்[...] அரசியல்.

ஆகவே, தடியெடுத்தவர்கள் [...]டல்காரர்களாகிவிட்டனர்.

போர்வந்தும், சரியான எதி[...] நடத்த முடியவில்லை.

நித்த நித்தம் புத்தம் புதி[...] திரிசபைகள்! சத்தற்ற திட்ட[...] நிமிடத்திற்கு நிமிடம்!

பிரான்ஸ், எத்தனை புகழ்[...]திருந்தாலும், உள்நாட்டில் இ[...] உருவான முறையிலில்லை.

அரசியல் நெறிபிறழ்ந்து கிட[...] பிரான்ஸில்!

ஊழல் மிகுந்து விட்டது நா[...] திறமைக் குறைவும், [...] கொண்டது அவைகளோடு!

பிரான்ஸ், இனி தோற்காமல[...] முடியுமா? ஆகவேதான் பிர[...] ஜெர்மனிக்கு மண்டியிட்டது!

* * *

பிரான்ஸின், இந்த துக்க [...]ரம், இந்தியாவிலே எழுதப்ப[...] என்ற சந்தேகம் உச்சக் கட்ட[...] அடைந்து விட்டது.

டெல்லி, பாரிஸாகிறது! இ[...]யத்தின் அறிகுறி!

டெல்லியின் அழகிய கன[...] கோன்னாட்—சர்க்கஸ், இ[...] பாரிஸ் நகரின் கடைவீதி[...] தோற்கடிக்கின்றது!

ஜெர்மன் படையெடு[...] போது, பிரான்ஸ் இருந்த [...] இன்று இந்தியா இருக்கிறது[...]

பாரததேவியென்று பாரா[...] இந்திய பூமியை!

கங்கை பாயும் தங்கத் தி[...] என்று கவிதை பாடினர்!

வேலி தாண்டுகிருள் தாய், மதில் பாய்கிருள் மகள்

...நானம் நிறைந்த நாடு, நா... ...தத்திரு நாடு என்று பண் ...சத்தனர்!

...வெள்ளையர் வெளியேறிவிட்டால், ...கே இன்பங் கொள்ளை, ...ள்ளையென்று பேசின..!

...அத்தகைய நாடு தான், பிரான் ...நிலை பெறுகிறது!

...இதில் துளியும் சந்தேகம் தேவை ...லை — அத்தகைய அரசியல் ...சுகள் மலை மலையாக நம் எதிரில் ...ந்து கிடப்பதால்!

...ஆள்வோர் மீது அதிருப்தி ...ர்ந்தபடியிருக்கிறது!

...ஆளவந்தார்களோ, தாங்கள் ...சிப் பீடமேறுமுன் பேசியவை ...தூசுகளெனத் தூரத் தள்ளி ...டனர்.

...நேரு நாட்டின் மந்திரியான ...ன், உடன்பிறந்தாருக்கு உத்தி...யாகம்! சொந்தத் தங்கை அயல் ...டில், இந்தியப் பிரதிநிதி ஆக்கப் ...டார்.

...நெருங்கிய உறவினர்களுக்கெல் ...ம் நல்ல நல்ல பதவிகள் கிடைத் ...! அவர் சொற்கேட்கும் செல் ...பிள்ளைகளே வெளிநாட்டுப் ...நிதிகளாக நியமிக்கப்பட்டனர்!

...ண்பர்களுக்கெல்லாம், பெரும் ...ரும் உத்தியோகங்கள் வழங்கப் ...டன!

...வெளிநாட்டிலாக்கா முழுவதும் ...ருவின் சொந்தக்காரர்களும், ...ழர்களுமே சூழ்ந்து கிடக்கின்ற...!

...அவர்களுக்குத் திறமை இல்லா... மட்டுமல்ல, அந்த வேலைகளுக் ...ய தகுதியே இல்லாதவர்கள்! ரஷ்... ...விலிருந்த பொழுது, ஸ்டாலின் ...ட்டியே கிடைக்கவில்லை, நேரு ...தங்கை விஜயலட்சுமியம்மை ...ருக்கு!

...அமெரிக்காவிற்கு அனுப்பப் ...ட ஆசப் அலி திரும்பி வந்தார், ...மெரிக்காவில் பிரதிநிதியாக ...க்கும் அருகதை யின்மையால்! ...த அருகதையில்லாத ஆசப்அலி ...ஸாவிற்கு கவர்னராக நியமிக்கப் ...டார்!

...அவர் லண்டன் சென்றிட வேண் ...என்றபொழுது வி. பி. மேனனை அந்த இடத்திற்கு நியமித்தனர், தற்காலிகமாக!

ஆசப் அலி நேருவுக்கு நெருங்கியவர்! மேனனோ, பட்டேலுக்கும் பழக்கமானவர், நேருவுக்கும் வேண்டியவர்!

ஆகவே, நேருவின் அன்புக்குரியவர்கள் அத்தனை பேரும், ஆட்சிக் கூடாரத்தில், ஏதாவதொரு பேரில் இடம் பெற்றுவிட்டனர்!

பட்டேலின், புன்னகையின் பொருள் புரிந்த சமஸ்தானபதிகள், அவர்கள் சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்க்கப்பட்டாலும், அவர்களின் நிலை மாருமல், மாகாண கவர்னர்களாக்கப்பட்டனர்.

பவநகர், பட்டேலின் செல்லப் பிள்ளை. ஆகவே சென்னை கவர்னரானர்!

ரயில்வே மந்திரி, கனம் கோபால்சாமி மருமகன் மானேஜராக, புதியதோர் இணைப்புத் திட்டமே போட்டார்.

ரயில்வே நிர்வாகமே, ராமஜெபமயமாகிவிட்டது!

பொருளாதார நிர்வாகமோ, பூங்கொடி போல் ஆடிக்கொண்டிருக்கிறது. மந்திரிகள் மாறி மாறி வந்தனர். சர். சண்முகம் விலகினர், மத்தாய் வெளியேறினர், கொஞ்சகாலம் பாபா இருந்தார், இன்று தேஷ்முக் திணறுகிருர்!

உணவு இலாக்காவிலே, ஜெயராம்தாஸ் தௌலத்ராம் இருந்த பொழுது ஊழல் மலிந்து கிடந்தது, பைல்கள் அத்தனையும் தப்பும்தவறுமாகக் கிடந்தன.

ஆகவே, அவரை நீக்கி வேறு மந்திரி நியமிக்கவேண்டுமே, நிர்வாகம் புரியத் தெரியாத ஜெயராம் தாஸை விலக்குவோம், என்று கூறவில்லை.

ஆளத் தெரியாத ஜெயராம்தாஸ், வீட்டுக்கனுப்பப் படவில்லை. ஒரு மாகாண கவர்னராக்கப்பட்டார்.

முன்ஷி சென்ருர். அவர் உணவு மந்திரியாக இல்லை — பஞ்சத்தின் மந்திரியானர்!

கல்வி இலாக்காவோ, கலைமாநாடாக மட்டுமே இருக்கிறது. ஆசாதுக்கும், அவர் இலாக்காவுக்கும் எவ்வளவு தூரம் என்பது அவரின் வாழ்க்கையைப் புரட்டியவர்களுக்குப் புரியும்!

நேருவின் அணைப்பு சுகம், ஆசாதுக்கு உண்டு என்பதைத் தவிர, வேறு காரணமில்லை, அவர் அந்த இலாக்கா பார்ப்பதற்கு! ஆகவே, மாநாடு கூட்டுகிருர், மகிழ்கிருர்!

சுகாதார மந்திரி அமிர்த கௌரியார், இந்தியாவில் இருக்கும் நாட்கள் மிகவும் குறைவு. அடிக்கடி தம் சுகம் நாடி அயல்நாடு சென்று விடுகிருர்!

மத்திய ஆட்சி, இப்படி எல்லாத் துறைகளிலும் இருக்கிறது!

ஆகவே, நேரு வழிகாட்ட, மாகாண மந்திரிகளும் பின்பற்றினர்.

அப்பன் தீவட்டிக் கொள்ளை நடத்தினல், மகன் பகற் கொள்ளையடித்திடுகிருன்.

தாய் விபசார விடுதி நடத்தினல், மகள் சோரம் போகிருள்!

நேரு தொடங்கினர். அவரின் நேர் வழி வந்தவர்கள் முடித்து வைத்தனர்!

மாகாண சர்க்கார், பிரதமர் வழியிலே நடக்கிறது என்பதற்கும் வேறெங்கும் செல்ல வேண்டியதில்லை!

நேரு முதல் தவறு செய்தார். அது முடிவில்லா தவறுகளுக்கு முதல் காரணமாயிற்று! இதனை சென்னை எடுத்துக் காட்டுகிறது.

பிரகாசம், மந்திரிமார்களின் மீது சாட்டிய குற்றச்சாட்டுகளே போதுமானவை!

உற்ருர், உறவினர்களுக்கு உத்தியோகம் கொடுத்தனர்.

வேண்டியவர்களுக்கு பஸ் பாதைகள் தந்தனர்.

சிமெண்ட் பர்மிட், பெட்ரோல் பர்மிட் தரப்பட்டன, நெருங்கியவர்களுக்கு!

தங்கள் பிள்ளைகளை அயல் நாடுகளுக்கு படிப்பிற்கு அனுப்பினர், சர்க்கார் செலவில்.

லஞ்சம் வாங்கினர். கைப்பணம் பெற்று காரியங்கள் செய்தனர்.

இப்படி, தாய் வேலியைத்

சாக்கடை நீரிலே ஜலக்ரீடை செய்கிறார்க

தாண்டினால், மகள் மதிலையே ஏறிக் குதித்தாள்!

மந்திரிகளே இப்படி யென்றால், அவர்கள் கீழ் பணியாற்றும் அதிகாரிகள், கையெழுத் தென்றாலே, இரும்புப் பெட்டியைத் திறப்பதென்று அர்த்தமாக்கிவிட்டனர்!

அண்ணன் எட்டடி தாண்டினால், தம்பி பதினாறடி பாய்கிறான்!

லஞ்சம் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது!

ஊழல்களே துரைத்தனம் நடத்தத் தொடங்கிவிட்டன.

பித்தலாட்டங்கள் சிங்காதன மேறியவுடன், அடக்குமுறையும், ஆர்ப்பாட்டச் சட்டங்களுமே, மதியூக மந்திரிகளாகிவிட்டன.

எடுத்ததற்கெல்லாம், அடக்குமுறைச் சட்டம் கர்ஜித்தது! வெறியாட்டம் ஊளையிட்டது!

நேர்மையானவர்கள் வாழ முடியவில்லை!

நீதியின் பாதையில் நடப்போர் எவரும், தம் போக்கிலே செல்ல முடியவில்லை!

ஒரு நிர்வாகத்தில், இன்னொரு நிர்வாகம் தலையிடுகிறது!

மந்திரிகளுக்கு வேண்டியவர்கள், மாபாவம் தீர்ந்த படலம் போல, மன்னிக்கப்படுகின்றனர்!

எம். எல். ஏ.,க்களுக்கு வேண்டியவர்களென்றால், எந்தக் குற்றமும் செய்யலாம் என்றே மக்கள் கருதுகிறபடி, நிர்வாக சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது.

ஒரு மந்திரிக்கும் இன்னொரு மந்திரிக்கும் போட்டி! ஆகவே, இரண்டு இலாக்காக்களும், கர்த்தபங்களின் மணி மண்டபங்களாகி விடுகின்றன!

ஆளவந்திருப்போர் சாக்கடையில் ஜலக்ரீடை செய்கிறார்கள்! ஆளுங் கட்சியைச் சேர்ந்தவரோ, மலக்குழியில் சந்தனம் பூசுகின்றனர்!

ஆட்சியிலே ஊழல்! கட்சியிலேயும் குழப்பந்தான்!

வீடுதான் இடிந்ததென்றால், விளையும் வயலிலேயும் வெள்ளம் வந்து பாழாகிவிட்டது!

தாய்க்கு அம்மை, அதைக்காண சகிக்காமல் உள்ளே சென்றால் மனைவிக்கு காலரா!

வீட்டுக்குடையவன் எந்த நிலையிலிருப்பான்? அப்படித்தான் தவிக்கிறது, நாடு.

காங்கிரஸ், ஆட்சியை நடத்துகிறது!

அதுவே இன்று ஊழலின் உறைவிடமாய், குழப்பத்தின் மறைவிடமாய் மாறிவிட்டது.

ஆளப் போனவர்கள் அனைவரும் சுயநலச் சூறாவளியில் சிக்கிக் கொண்டனர்! தேச சேவையென்று வாய் முணு முணுத்தது, ஆனால், சுயநல ஆசையே, அவர்களை ஆட்டிப் படைத்தது!

கட்சியிலே இருப்பவர்களோ, தாம் கைநழுவ விட்டுவிட்ட சந்தர்ப்பத்தை தேடுகின்றனர்!

ஆட்சியில் சுயநலம்! கட்சியில் சுயநலம்!

ஆகவேதான் கட்சி கரைகிறது— சறையாகிறது!

கட்சியின் கோணல்களைக் காணவும் நாணுவோர் வெளியேறுகின்றனர்!

வெளியில் வந்தவர்களோ—சும்மாயிருக்கவில்லை.

புதுக் கட்சி ஏற்படுத்தி, போர்க் கோலம் புகுந்துள்ளனர்.

பிறந்த இடத்தை, புகுந்த இடத்திலிருந்து எதிர்க்கின்றனர்!

காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் ஏராளம்!

கிருபளானி, ரங்கா, பிரகாசம், ராய் இப்படி வெளியேறுவோர்கள், புது முகாம்கள் அமைக்கின்றனர். அப்படி அமைக்கப்படுகிற புதிய கூடாரங்களிலும் பழைய வாடையடிக்கிறது.

ஆந்திரப் பிரஜா கட்சி, அண்மையில் அமைக்கப்பட்டது. அதிலே, பிரகாசர், ரங்கா இருவருக்கும் அபிப்பிராய பேதம்!

இந்த வாரத்திலே கூட, காங்கிரஸ் கரைந்திடுகிறது என்று, முன்னாள் மந்திரி, கரந்த் தன் வெளியேற்றத்தின் மூலம், நாட்டுக்கு அறிவிக்கிறார்.

உத்திரப் பிரதேச சட்ட ச
உறுப்பினர் கமலா சௌத்ரி அ
யார் விலகிவிட்டார்.

அவருடன், மீரத் நகர காங்
கமிட்டித் தலைவர் ராமே
சர்மாவும், இன்னும் பதினொரு
விலகினர்.

விலகிய கரந்தோ, புதிதாக
பிக்கப்பட்டுள்ள, கர்நாடக
கட்சியிலே பணியாற்றப் போ
ராம்.

இவை, இந்த வார செ
கணக்கிலே, குறிப்பிடத் தக்

* * *

Nepotism
Interference

இந்த இரண்டு வார்த்தை
காட்டியுள்ளார், விலகிய கர

உற்றார், பெற்றோர் நலத்
ஊராருக்கு ஓரவஞ்சனை பு
முதல் வார்த்தை புலப்படு
இதற்கு தனியொரு வார்த்
தாயகத்தில் கிடைக்கவில்லை!

இன்று ஆளவந்தாருக்கெ
கில நாட்டார் அருளிய அ
செல்வம் அது!

குறுக்கிடுதல் எதிலும்,
போக்கில் தலையிடுவது
வளர்ந்து வருகிறது, இதைச்
பிடுகிறார், இரண்டாவது வா
யின் மூலம்!

இரண்டும் அதிகரிக்கி
ஆகவே விலகுகிறேன்
கரந்த் கடைசியாகக் கூ
காங்கிரசை கை கழுவி விட்

இந்த இரண்டு நிலைகளு
பிரான்ஸை, ஜெர்மனியை
முடியாத அளவு செய்தன

அத்தகைய பயங்கரச்
இன்று இந்தியாவில் இரு
காண நாம் அஞ்சுகிறோம்.

கரந்த், இதனைக் கண்டு
விட்டு விலகுகிறார்!

இவருக்கு முன்னால் பல
யுள்ளனர்!

இவர்கள் கட்சியை விட்
விடுவதால் மட்டும், அவை
விட்டு விலகி விடுமா?

(9-ம் பக்கம் பார்க்க

10-ம் பக்கத் தொடர்ச்சி

இதற்கு நேரு காரணமா, பட்டேல் காரணமா என்ற ஆராய்ச்சி தேவையில்லை. ஆனால், இருவருக்கும், அவர் தேவைப்பட்டார்!

இலாக்கா இல்லையே தவிர, அவருக்கு, நேருவுக்கும், பட்டேலுக்கும் இடையே தூது போகும் இலாக்கா ஒதுக்கப்பட்டுதானிருந்தது!

இருவருக்கு மிடையே தூது செல்பவர், அவர்களை ஒத்தவர்களாக இருக்கவேண்டும் என்று கருதியே, ஆச்சாரியாரை அழைத்திருக்க வேண்டும்!

ஆச்சாரியார் சாதாரணமானவரா? சாணக்கியரின் சந்ததியினராயிற்றே! நேருவும், பட்டேலும் நெருங்கிவிட்டால் அவரது தூது இலாக்காவுக்கு, வேலையில்லையல்லவா?

அவர்கள் பாலம் போடமுடியாத தூரத்திலே இருந்தனர். ஆச்சாரியாரே, தூதரானார், பாலமாகவிட்டாலும்!

இந்த நேரத்தில் தான் பட்டேல் மறைந்தார்!

தாண்டனுக்கு அப்பொழுது தன் பக்க பலம் முறிந்தது என்ற எண்ணமிருந்தாலும், தான் இருக்கும் காங்கிரஸ் தலைமை பீடத்தின் மூலம், நேருவோடு மோதமுடியும் என நம்பினார்.

வேறொரு பட்டேலை உண்டாக்க முடியும் என்றும் எண்ணினார்.

தாண்டனும், ஆச்சாரியாரும் குழைந்து பேசிடும் நிகழ்ச்சிகள் பத்திரிகைகளில் இடம்பெறா விட்டாலும், ஏற்பட்டன, உண்மையில்!

ஆச்சாரியார், உள்நாட்டு மந்திரியானார்!

இந்தப் பழைய சரித்திரம் புரிந்தவர்களுக்குத் தெரியும், கிக்வாய் பிரச்சினை குறித்து, ஒரு பெரிய கிளர்ச்சியை தாண்டன் ஏன் தொடங்கியுள்ளார் என்பது!

*   *   *

பாலும் திரிந்தது—பானையும் உடைந்தது!

இப்படித்தான் காங்கிரஸின் கதை, வரும்பொதுத் தேர்தலோடு முடியும்!

இதனை நாம் கூறுகிறோம் என்று நினைக்கவேண்டாம்.

காங்கிரஸ், வருந்தேர்தலில் தோற்றால், யாரோடும் சேராது, தனியான. வலுவுள்ள எதிர்க் கட்சியாக இருக்கும்!

இதனைத் திருச்சியில் பேசிய காங்கிரஸ் கனம் கோபாலர் குறிப்பிடுகிறார்.

இந்தியா என்றால், காங்கிரஸ்—காங்கிரஸ் என்றால் இந்தியா என்பது போய்விட்டது.

இந்தியாவின் ஏகசக்ராதிபதி காங்கிரசே என்பதும் மறைந்து விட்டது.

காங்கிரசை எதிர்க்க நாட்டில் வேறு கட்சி ஏது என்ற அகங்காரப் பேச்சும் அடங்கிவிட்டது.

இப்பொழுது, தோற்ற பிறகு, காங்கிரசின் ஜாதகம் என்ன என்பதைக் கணிக்கிறார்!

காங்கிரஸ் ஆளும்பொழுது, அந்த ஆட்சியில் மந்திரியாக இருக்கும், கோபாலர்!

அந்தஎண்ணம் பிறந்ததே, பானை உடைந்து விடும் என்பதின் முன்னறிவிப்பே!

பால் திரிந்து போனது நாடறிந்த உண்மை.

பானையும் உடைந்து விடும் என்பதை, நேரு, இன்று விலகுகிறேன் என்று கூறிடுவது உணர்த்துகிறது!

நேரு காரியக் கமிட்டியிலிருந்து விலகுகிறார்! பார்லிமெண்டரி போர்டிலிருந்து விலகுகிறார்! ஆம், உறி ஆடுகிறது, பானை விழப்போகிறது என்பது தெரிகிறது!

★

நன்றி அறிவிப்பு

★

5—8—51 ஞாயிற்றுக் கிழமை ஈரோட்டில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில் கலந்து கொண்டு மாநாடு வெற்றிக்கு பாடுபட்ட அருமை தொண்டர்கள், தொண்டர் படை கேப்டன்கள் ஈ. ஏ. மதார்சா, எஸ். பி. எம். சுந்தரம், மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து மிக்க சொற்பொழிவாற்றிய பொதுச் செயலாளர் அண்ணாதுரை மற்றும் மாநாட்டில் கலந்துகொண்டு உலகை திருத்திய உத்தமர்கள் குறித்து பேசிய திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்கள், நாடகத்தில் பங்கு கொண்டு நடித்த நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, மற்றும் நாடகத்தில் நடித்த எல்லா நடிகர்கள், பந்தல்வேலைகளை ஒழுங்குபட முடித்து தந்த எஸ். ஏ. கதிர் மின்சார விளக்கு அமைப்பும், ஒலி பெருக்கி அமைப்பும் ஏற்படுத்திக் கொடுத்த யுனைடெட் ரேடியோ கம்பெனியாளர்கள், பந்தல் அலங்காரத்துக்கு கைத்தறி துணி பீஸ்கள் கொடுத்துதவிய பாம்பே ஹால் உரிமையாளர் கன்பத்ராய் பந்தல் அலங்காரம், விளம்பரத் தட்டிகள் மற்றும் பல சித்திர வேலைகளை செய்த காஞ்சி ஓவியர் சி. ஆர். சந்திரன், மாநாடு டிக்கட்டுகளை விற்றுக் கொடுத்த எல்லா வெளியூர் கழகத் தோழர்கள், மற்றும் மாநாடு ஆரம்ப காலத்தில் இருந்து மாநாடு வெற்றிக்கு உறுதுணையாக இருந்து அவ்வப்பொழுது ஆலோசனைகள் கூறிய தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், சென்னியப்பன், ஆர். டி. முத்து, எத்திராஜ், சின்னப்பன், பி. ஸி. சாமி, எம். பழனியப்பன் நாடக மேடையை அலங்காரம் செய்த தோழர் ஈ. வே. கி. செல்வராஜ் அவரது தோழர்கள், ஆகியோருக்கும், இன்னும் மாநாடு வெற்றிகரமாக நடைபெற பாடுபட்ட அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தங்களன்புள்ள,

S. R. சந்தானம்.
S. அப்பாவு.
R. பெருமாள்.

விரைவில் வெளிவரும்!

புதிய நூல்கள்

சி. பி. சிற்றரசு எழுதிய

மார்டின் லூதர்
வெங்கலச் சிலை
விஷக் கோப்பை
தங்கவிலங்கு
(நாடகம்)

தமிழ் மன்றம்
தெப்பக்குளம், :: திருச்சி.

திராவிடநாடு

ஞாயிறு] 18—8—51 [காஞ்சி

பிரார்த்தனை

என். ஜி. ஓ. சங்கம், அதன் உறுப்பினர்களை வறுமைக் கோடு மையிலிருந்தும், பட்டினி பயங்கரத்திலிருந்தும் காப்பாற்றும்படி கடவுளை பிரார்த்திக்கிறது!

இந்த வரிகளைத்தாங்கிய அட்டைகளை அவர்கள் சட்டைகளில், மாட்டியிருந்தனர்.

நல்ல வெயில்! உழைத்துக் களைத்ததால் பசி! கையிலே உணவுப் பொட்டலங்கள்! ஆகாரந்தாங்கி வரும் பாத்திரங்கள்!

பொட்டலத்தைப் பிரிக்கவில்லை! ஆகாரந் தாங்கியிருக்கும் பாத்திரங்களைத் திறக்கவில்லை!

எல்லோரும் ஒன்று கூடினர்! கடவுளை பிரார்த்தினர்!

இருநூறுக்கு மேற்பட்ட என். ஜி. ஓ. க்கள், 14-ம் நாள், சேப்பாக்கம், சர்க்கார் கட்டிடத்தில், மதியம் உணவு நேரத்தில பிரார்த்தனை கூட்டம் நடத்தினர்!

அவர்களின் மத்திய குழுவின் ஆணைப்படி ஆண்டவனை வேண்டினர்! அதுவும் இந்த பிரார்த்தனையை அவர்கள் கடைசி முறையாகக் கையாண்டுள்ளனர்!

பிரார்த்தனை, உரிமைப் போருக்கு, கடைசி ஆயுதம் எனக் கண்டு பிடித்துள்ளனர்!

அவர்களின் கடைசி முயற்சி பிரார்த்தனை! இதுவே, வேடிக்கையானது!

வேடிக்கை நீடிக்கிறது, அவர்களின் வேண்டுதலைக் கேட்கும் பொழுது!

அவர்கள் வறுமையிலே தவிக்கிறார்கள்! பட்டினியால் பாதிக்கப் படுகிறார்கள்! வறுமையை நீக்கி வாழ்வளிக்க வேண்டும் என்று ஆண்டவனை வேண்டவில்லை! பட்டினி நீங்கி, வயிறார உணவு கிடைக்க வழிகாட்டவேண்டி, வரங்கேட்கவில்லை!

வேண்டுபவர்கள் அவர்கள்! நீக்கப்பட வேண்டிய குறைகளோ அவர்களைச் சூழ்ந்திருப்பவை! இருந்தாலும் இறைவனை, எங்கள் குறைகளை நீக்குங்கள் என்று இறைஞ்சிடவில்லை, அவர்கள். ஜீ. ஓ. க்கள்.

ஆண்டவனை வழைத்தனர்! வேண்டிக் கொள்கிறோம் என முடித்தனர்! ஆனால் இடையிலே கோரிய வரத்தில், நேராகத் தங்களுக்கு ஏதும் செய்யச்சொல்லி கடவுளைக் கேட்கவில்லை!

பிரார்த்தனை முறையே பிரமிக்க வைக்கும்! அதையும் பின்னே தள்ளி, முன்னே நிற்கிறது, பிரார்த்தனையில், அவர்கள் கோரிய வரத்தின் சாரம்!

இந்த பிரார்த்தனைக் கூட்டம் அவர்கள் சங்கத்தின் முதல் பிரார்த்தனை கூட்டம், ஆனால், அவர்கள் குறைகளை குறைக்க, நீக்கக்கூட அல்ல, கையாளும் கடைசி பிரயத்தனம்!

கடைசி பிரயத்தனத்திலும், காரியத்தை நேராகச் செய்ய முடியவில்லை! கடவுளுக்குக் வழிகாட்டியுள்ளனர்!

ஆண்டவனே, உங்களை மண்டியிட்டு வேண்டுகிறோம். எங்களை ஆளவந்திருப்போருக்கு நிறைய நிதி தாருங்கள்.

அவர்கள் வேண்டிய வரம் இது தான்!

இந்த வரம் வழங்கப்பட்டால், அவர்கள் குறைகள் போய் விடுமாம்!

சர்க்கார், என். ஜி. ஓ-க்கள் பக்கம் பார்வையை திருப்பாமலிருப்பதற்குக் காரணம் பணப் பஞ்சம் என்று எண்ணி இந்த வரம் வேண்டியுள்ளனர்.

ஆனால் பணம் குறைந்தவர்கள் மட்டுமல்ல ஆளவந்தார்கள் மனமும் இல்லாதவர்கள் என்பதும் அவர்கள் அறிந்ததே!

பணம் கிடைத்தும், மனமிளகாவிட்டால், அதற்கொரு பிரார்த்தனை நடத்தவேண்டும் போலும்!

* * *

அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கு வேறு வழிதானேது?

பிரார்த்திக்கிறார்கள்! பிரார்த்தனையிலும் அவ்வளவு பயந்து

தி. மு. க.

இரண்டாம் ஆண்டு

தனி மலர்

திராவிட முன்னேற்றக் கழக இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, "திராவிடநாடு" சிறப்பு மலர் 23—9—51-ல் வெளியிடப்படும்.

இரண்டாம் ஆண்டில், கழகம் ஆற்றிய அரும்பணிகளை தொகுத்துக் காட்டும் காலக் கண்ணாடி, இம் மலர்.

இதில்,

★ இரண்டாம் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையையும், தேதிவாரி காட்டும் கழகக் காலண்டர்.

★ நடந்த கூட்டங்கள், மாநாடுகள், சிறப்பு நிகழ்ச்சிகளின் வருணனை, படங்களுடன்.

★ மாநில மாநாட்டு ஏற்பாடுகள், சிறப்புகள்.

★ கழக சட்ட திட்டங்களின் நகல்.

★ ஆட்சியாளர்கள் இவ்வாண்டில், வீசிய அடக்குமுறைகள் பட்டியல்! நாம் தாங்கியுள்ள கொடுமைகளின் கணக்கு விவரம்!

★ தழைத்துள்ள புதிய கிளைக் கழகங்கள்.

★ கழகத்தின் மாணவர் அணி வகுப்பு! பெண்களின் பங்கு!

★ பொதுச் செயலாளரின் அறிக்கை.

இன்னும்,

★ படங்கள்—கவிதைகள்-சிறுகதைகள்—கட்டுரைகள் இடம் பெறும்.

50 பக்கங்களுடன், அழகிய மேலட்டையுடன் மலர் வெளிவரும்.

விலை எட்டணா

எவ்வளவு இதழ்கள் தேவையென்பதற்கு உடனே முன் பணத்துடன் எழுதி அனுப்புக.

ண்டுதான் வேண்டிக்கொள்ள
ண்டும்!

ஆளவந்தார்கள், ஆளவந்தார்
ாக அவனியிலே பவனி வரச்
ப்பவர்கள் அவர்கள்!

ஆனுல், அவர்கள் வறுமையில்
கி வாடுகிறூர்கள்! பட்டினியால்
தவிக்கிறூர்கள்!

ாட்டத்தை ஓட்டவேண்டும்
று வாய்திறந்தாலோ மிரட்டுகி
கள்!

ஆளவந்தார் அதட்டமுடிகிறது!
ர்களுா அடங்க வேண்டியிருக்
து!

சர்க்கார் கணவன்! அதிகாரி
னவி!

இந்த தாம்பத்ய வாழ்க்கையே,
ட்டின் ஆட்சிமுறை!

கணவன் மிரட்டி, உருட்டி தன்
னியைமட்டும்மினுக்கி,வெளுத்த
டைமாட்டி, ஊருக்கு வெளிச்
போடுவதும், வீட்டிலே, அடுப்
குமேலே காலிப்பானையும்,அடுப்
குள்ளே இளைத்த பூனையும்
ருப்பதைக்கண்டு மனம் வெதும்
ம், கந்தலே பட்டாக்வும், கண்
ரே அணிகலனுகவும் கொண்ட
னவி முனு முணுப்பதும் நாம்
ணுத காட்சியல்லவே!

அக்காட்சிக்கும், நம் ஆட்சிக்கும்
த்தியாசமில்லையென்பதற்கு என்.
ஓ: க்களே சாட்சி!

வீட்டுநிலையை மனைவி சொன்
ல், கணவன் மிரட்டுவான், கண்
ா உருட்டுவான், கண்டபடி
ட்டுவான்!

அதுபோலத்தான் என். ஜி. ஓ.க்
ர் இதுவரை எடுத்துக்கூறிய சந்
ப்பங்களிலெல்லாம் தடுத்துப்
பசி அடக்கிவந்தனர் ஆளவந்தார்.

ஓமாந்தூரார் ஆட்சி பீடத்திலி
ந்தபொழுது, ஜகதீசர் காட்டிய
வலைநிறுத்தப் பாதையிலே என்.
. ஓ.க்கள் சென்றனர்.

துரோகமும், தோல்வியும் இரு
கோதரிகளல்லவா? அவர்கள் ஒரு
ருக்குப்பின் ஒருவராக வந்து துக்
ம் விசாரித்தனர்.

* * *

சர்க்கார் சத்தியவான்! என். ஜி.
. சாவித்திரி!

சத்தியவான் உயிரை எமன்பறித்
ச்செல்லும்பொழுது, சாவித்திரி
மனைத் தொடர்ந்தாள். அவனை
விடவில்லை. வரம் வேண்டினுள். தர ஒப்பினுன்!

எமன் கணவன்உயிர் தவிர வேறு வரம் எது வேண்டினும் தருகிறேன் என்றுன்.

சாவித்திரி யோசித்தாள்! கடைசியில் தனக்கொரு பிள்ளை வேண்டும் என்று கேட்டாள்! அவசரத்தில் எமன் வரம் வழங்கினுன்!

பிறகு சாவித்திரி, கணவனின்றி பிள்ளை எப்படி கிடைக்கும் என்று கேட்டாள்! எமன் விழித்தான்!

பிள்ளைவரம் கொடுப்பதிலே, கை தேர்ந்தவர்கள் நம் கடவுள்மார்கள்! அதுபோலவே வரங்கொடுத்து பிறகு திருட்டுவிழி விழித்திடும் தெய்வங்களுக்கு இங்குபஞ்சமில்லை!

தன்கணவன் உயிர் வேண்டும் என்று நேராக வேண்டவில்லை! நேராகக் கேட்டால் கிடைக்காதென்று பிள்ளைகேட்டு, பிறகு விரும்பியதையடைய முயன்றுள் சாவித்திரி! இப்படி கதைகூறுகிறது!

சாவித்திரி சாயல், என். ஜி. ஓ.க்களுக்கு இருக்கிறது!

அவர்கள் வேலை நிறுத்த தோல்விக்குப்பிறகு, பல்வழிகளில் முயன்றனர்!

மந்திரிகளைப் பேட்டி கண்டனர். தங்கள் குறைகளை எடுத்துக் கூறினர்.

சந்தர்ப்பங்கிடைத்தபொழுதெல்லாம், சொல்லமுடிந்த வரையில் சொல்லிப் பார்த்தனர்!

விண்ணப்பம், வேண்டுகோள், வேதனை விளக்கம், வேலை நிறுத்தம் என்று போய்ப்பார்த்தனர்!

இப்பொழுது வேலை நிறுத்தத்திலிருந்து இறங்கிவந்து,பிரார்த்தனைக் கூடம் தேடியுள்ளனர்!

பிரார்த்தனையிலும், தங்கள்குறைகளைநீக்கச்சொல்லி, நேராகவேண்டவில்லை! சர்க்காருக்கு தாராள நிதி தர ஆண்டவனை வேண்டியுள்ளனர், அதன்மூலம் தங்கள் குறைபோகும் என்று. பிள்ளையைக்கேட்டு, பிறகு கணவன் உயிர் கிடைக்கச் செய்ய முயன்ற சாவித்திரி போல!

ஆகவே பிரார்த்தனையிலும் பத்தினிக் குரல் ஒலிக்கிறது!

என். ஜி. ஓக்கள் பிரார்த்திக்கிறூர்கள், ஆளுவோருக்கு, அதிக செல்வந் தரவேண்டி!

என். ஜி. ஓக்களின் பிரார்த்தனை, நாட்டுப் பிரச்சினையாக்கி, நல்வழி காண ஆட்சியாளர் பிரயத்தனம் செய்ய வேண்டும்.

X

'வாழ முடியாதவர்கள்'

வழங்கிய

காணிக்கை

சென்னை ரூ. 1500

செங்கற்பட்டு ரூ. 1000

தோழர் மு. கருணுநிதி தீட்டிய "வாழ முடியாதவர்கள்" என்ற அரிய நாடகம், 8—8—51 மாலை சென்னை ஒற்றவாடையிலும் 12—8—51 இரவு காஞ்சி அசோகாவிலும், முறையே சென்னை, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக நிதிக்காக நடத்தப்பட்டது.

தோழர் கருணுநிதி அவர்களே, பிரதம பாகம் ஏற்று நடித்தார், இன்னும் ஈழத்தடிகள், அரங்கண்ணல், கவிஞர் கண்ணதாசன், தில்லை-வில்லாளன், சி. வி. எம். அண்ணுமலை, காஞ்சி கவுன்சிலர் இராசகோபால், கே. டி. எஸ். மணி, ஆர். கே. மூர்த்தி சே. கோ. பெருமாள், பிற இயக்கத் தோழர்கள்பலரும்,நடிகமணிகளான 'சிவாஜி' கணேசன், எம். என். கிருஷ்ணன், நம்பிராஜன், மகாலிங்கம், முத்து, மணி ஆகியோரும் மற்றும் **பலரும்நடித்தனர்.**

இரண்டுநாட்களிலும், சி. என். ஏ, தலைமை தாங்கினுர்.

சென்னை நாடகத்தின் மூலம், மாநில மாநாட்டுக்காக ரூ. 1000மும், சென்னை மாவட்டக் கழகத்திற்கு ரூ. 500ம், காஞ்சி நாடகத்தின் மூலம், மாநில மாநாட்டிற்கு ரூ. 1000மும் அளிக்கப்பட்டன.

சென்னையில் தோழர்கள் என். வி. நடராசன். கண்ணபிரான், சி. வி. ராசன் போன்றுரும் மற்றும் பலரும், காஞ்சியில் தோழர் புட்டாசாமியும் இன்னும் இயக்கத் தோழர்களும் நாடகம் வெற்றிகரமாக நடத்த பெரிதும் பாடுபட்டனர். அவர்கள் முயற்சியே, நாடக வெற்றிக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. அவர்கள் எல்லோரும், நம் பாராட்டுதலுக்குரியவர்கள். நாடகத்தின் மூலம் நிதி தந்த தோழர்கள் அனைவருக்கும் நம் நன்றி உரித்தாகுக!

ஜி. வரலக்ஷ்மி
உணர்ச்சியுடன் நடிக்கும்
உன்னதச் சித்திரம்..
பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்
அண்ணி
தமிழ்
டைரக்ஷன் பிரகாஷ் ராவ்
விரைவில்
வெளிவருகிறது
நேஷனல் பிக்சர்ஸ், சென்னை.
G.H.RAO

ஒரு நாட்டிற்கு இரண்டு ராஜாக்கள்

4-ம் பக்கத் தொடர்ச்சி

டெல்லி, பாரிஸாகிறது! இதைத் தடுக்க, கட்சியை விடுகின்றனர் பலர், காரந்தைப் போல!

ஆனால், இந்தியா, பிரான்ஸாகாமல் தடுக்க, வழியடைத்துவிடவில்லை!

அதனை அவர்கள் உணர்ந்து ஒன்று கூடிச்செய்ய வேண்டும்!

* * *

காரந்த் கட்சியை விட்டு விலகினார்!

ஆனால், நேரு, கமிட்டிகளைவிட்டு விலகுகிறேன் என்கிறார்.

நேருவின் நிழலிலேதான், காங்கிரஸ் நிற்கிறது!

அவரின் பெயரை வைத்துக்கொண்டு பிழைப்பை நடத்துகிறது!

அவர் உயிர், காங்கிரஸ் உடல், என்கிறார்கள்.

அவர் என் வாரிசு என்றார் மறைந்த உத்தமர் காந்தியார்.

பரந்த படிப்பாளி, உயர்ந்த நோக்கங் கொண்டவர், உலகறிந்தவர் என்ற பாராட்டுதலுக்குரியவர்!

அவர் இந்தியாவின் இதயம், ஆசியாவின் ஜோதி, அகில உலக அறிஞர் என்ற புகழ்மாலை சூட்டப்பெற்றவர்.

நேருதான் காங்கிரஸ். காங்கிரஸ் என்றாலே நேரு.

அவர் விலகுகிறார், மத்திய பார்லிமெண்டரி போர்டிலிருந்தும், காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்தும்!

காரந்த் கட்சியை விட்டு விலகுகிறார்!

நேரு, திரும்பக் கூடும், காங்கிரஸ் நெருக்கடி தீர்ந்தது என்று பாடக் கூடும். அது அல்ல நமக்குள்ள பிரச்சினை!

நேருவே விலகவேண்டிய அளவு, காங்கிரஸ் கலனாகிவிட்டது!

அந்தப் பரிதாப படமே, நம் கண் முன்னால் நிற்பது!

அறுந்த வீணை! முறிந்த வில்! திரிந்த பால்!

நரம்பறுந்த வீணையிலே நாதம் கிளம்பாது.

முறிந்த வில்லிலே, நாணேற்ற முடியாது, அம்பெய்ய இயலாது.

திரிந்த பாலில், திரும்பவும் சுவை சேர்க்க முடியாது.

அப்படித்தான் காங்கிரசாகி விட்டது.

திரிந்த பாலிலே ஒரு திப்பி நேரு. வேண்டுமானால் பெரிய திப்பியாக இருக்கலாம்!

தாண்டனும், அதில் மிதக்கும் பாலேடையின் ஒரு துளி!

இருவருக்கும் ஏற்பட்ட தகராறு, இன்று நேருவை விலகுகிறேன் என்று கூறவைத்துவிட்டது.

கட்சியை எதிர்த்த கித்வாயை, எப்படி மந்திரியாக இருக்கச் சொல்லலாம் நேரு, என்பதே தாண்டன் எழுப்பியுள்ள பிரச்சினை.

மத்திய மந்திரி சபையிலே, கட்சியைச் சேராத அம்பேத்கார் இருக்கிறார்.

சர். சண்முகம் இருந்திருக்கிறார்.

காங்கிரசில் சேராத மத்தாய் மந்திரியாக இருந்தார்!

பாபாவும், அவர்கள் கூடாரத்தைச் சேராதவர்.

தேஷ்முக்கும், வந்தேமாதர வழி வந்தவரா?

காங்கிரசுக்கு விரோதமாக பல காலமிருந்த சர். கோபால்சாமியார் கனமாகவில்லையா?

ஆனாலும், கித்வாய், ஜெயின் பற்றி தாண்டன் தகராறு கிளப்பியுள்ளார்.

இதற்குக் காரணம், அவர்கள் காங்கிரசை விட்டு விலகினார்களே என்ற ஆத்திரமாக இருக்கலாம், என்பர் சாதாரணக் கண் படைத்தவர்கள்!

காங்கிரசையே எதிர்க்கிறவர்களை இருக்க சம்மதிக்கும், காங்கிரஸ் தலைவர், நேற்றுவரை காங்கிரசிலிருந்து, இன்று விலகியவர்கள் மந்திரி சபையிலிருப்பதை ஏன் சகிக்க மறுக்கிறார் என்றே எண்ணுவர் சூட்சும அறிவு படைத்தோர்!

தாண்டன் எழுப்பியுள்ள இந்தத் தகராறைத் தாண்டுவதற்குள் காண வேண்டிய உண்மைகள் பல உண்டு.

கித்வாய், ஜெயின் மீதுள்ள கோபமல்ல, இதற்குக் காரணம்!

காங்கிரஸ் சட்ட திட்டங்கள் படிதானே தாண்டன் பேசுகிறார் என்றால், காங்கிரசையே சேராதவர்கள் கூட அல்ல, எதிர்த்தவர்களும் மந்திரிகளாக இருக்கிறார்கள்!

தாண்டன், நேரு செய்ததைக் குற்றம் என்கிறார்!

நேருவோ, நெறித்த புருவத்தை சுருக்கவில்லை!

இங்கேதான் உண்மை மறைந்திருக்கிறது!

இந்தத் தகராறு, இன்று ஜுவாலையுள்ள நெருப்பானாலும், ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த சொந்த மாச்சர்யத்தின் வளர்ச்சியென்பது தெரியும்!

தாண்டன் உத்திர பிரதேசத்தைச் சார்ந்தவர்.

அம்மாகாண அரசியல் நடவடிக்கைகளில் இருவரும் சம்பந்தங் கொண்டவர்கள்.

தாண்டன், உத்திர பிரதேச காங்கிரஸ் தலைவராக இருந்திருக்கிறார். சட்டசபை சபாநாயகராகவும் பணியாற்றியிருக்கிறார். சிலகாலம், உத்திர பிரதேச மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

நேருவும், அலகாபாத் மன்னர் என அலங்காரப் பெயர் பெற்றவர். ஆனந்தபவனத்தின் அருமைமைந்தரென அவர் பாகாணத்தவர் அழைத்து மகிழ்ந்திருக்கின்றனர்.

உத்திர பிரதேசத்தில் பிறந்து, வளர்ந்தவர், வாழ்ந்தவர் நேரு.

தாண்டனும், அதே மண்ணிலே பிறந்து வளர்ந்தவர்.

ஆனால், நேரு, மேருவாக்கப்பட்டார்! தாண்டன், உத்திர பிரதேசத்தை தாண்டி, அகில இந்திய பிரச்சினைகளில் நுழையவே வெகு காலம் பிடித்தது.

ஒரே மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே கட்சியில் முன்னணித் தலைவர்களாக வளர்ந்தவர்கள்!

ஒரு நாட்டிற்கு இரண்டு ராஜாக்கள் இருந்தது போல, அவர்கள் உத்திர பிரதேசத்திற்கு!

எனினும், ஒருவர் உயருகிறார், மற்றொருவர் பொறாமைப் படுகிறார்!

ஆகவேதான், தாண்டன், காங்கிரஸ் தலைவராக முயன்ற சந்தர்ப்

அரசியல் வனத்தில் நவீன விசுவாமித்ரர்

பங்களிலெல்லாம் தோல்வி கண்டார்.

தாண்டனும், நேருவும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றாலும், மன வேறுபாடுகள் நிறைந்தவர்கள்.

தாண்டன் தாடியோடு, நேரு குல்லாயோடு, படங்கள் பார்க்கிறோம்.

இது உருவ வித்தியாசம், உடை வித்தியாசம் என்று மட்டும் கருதாதீர்கள்.

இது உள்ள பேதத்தின் விளைவென்று எண்ணுங்கள்.

தாண்டனுக்கு ராஜரிஷி என்றொரு பெயருண்டு. அது, அவர் காந்தியைப்போல மகானாக நடித்ததால் வந்தது என்றே கருதவேண்டும்!

ராஜரிஷி யென்று புராணங்கள் விசுவாமித்திரரைக் குறிப்பிடுகின்றன.

அவருக்கு, கோபம் அதிகமாம்—கோபம்மிகுந்தவர் என்று கூறுவர் தாண்டனைப் பிடிக்காதோர்!

விசுவாமித்திரருக்கு விடாப்பிடி குணமும் உண்டாம், அவர் தான் நினைத்த தவத்தை, பல இன்னல்களுக் கிடையே பல திக்குகளிலிருந்து முடித்தாராம். அப்பொழுது கிடைத்த பட்டம் ராஜரிஷியாம்! அவரைப்போன்று எடுத்ததை முடிக்கும் குணம் கொண்டவர் என்று தாண்டன் புகழ்மாலை பாடுவோர் கூறக்கூடும்.

இதே ராஜரிஷியை, இன்று பீடையென்றும் பேசும் காங்கிரஸ் ஏடுகளும் இருக்கின்றன!

அவர் இந்தி ஏகாதிபத்திய தலைவர். இந்தியைப் புகுத்தவேண்டும் என்ற வெறிப்போக்கின் தூதுவர்.

இந்தி எண்களைப் புகுத்துவதில் இவர் காட்டிய முரட்டுப் பிடிவாதத்தை யாரும் மறந்திருக்க முடியாது!

அவர் தேர்ந்த வகுப்புவாதியென்பது, முஸ்லீம்களைப்பற்றி அவர் பேசுவதைக் கேட்டால் தெரியும்.

அவர் வைதிக புரியின் முடிசூடா மன்னர்.

வர்ணாசிரம வெறிச் சேனையின் ஏகத்தளபதி!

பழமையின் பாதுகாவலர், இந்துமத இழிவுகளுக்கு, இன்னமும் வக்கீலாக உள்ளவர்.

மாகாணப் பித்தம் மனதில்! ஆனாலும், அகில பாரத் என்று பேசாத நாளில்லை!

உத்திர பிரதேசம் செய்த ஒரு பெருந்துரோகத்தை, இந்தராஜரிஷி கண்டிருந்தும், கண்டிக்கவில்லை.

திராவிடத்திற்கு, வடநாடு செய்த துரோகத்தில் மறக்க முடியாதது, உத்திர பிரதேச அரிசி விற்பனை!

திராவிட நாட்டிலே, பட்டினிச் சாவுகள்! பஞ்சப் படையெடுப்பு! பிள்ளையோ, பிள்ளையென்று கூவி குழந்தையை விற்கும் கோரக் காட்சி!

இந்த நேரத்தில், உத்திர பிரதேசம், திராவிடத்திற்கு அரிசி விற்றது! என்ன விலைக்கு, தெரியுமோ? ஒரு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட விலைக்கு, அநியாய விலைக்கு!

இதனை, ஏக இந்தியா வேண்டும் தலைவர் தவறெனக் கண்டிக்கவில்லை. அதுவும் அவரது மாகாணமே செய்த துரோகத்தைப் பற்றிப் பேசவில்லை.

நேருவும், இதுபற்றி ஏதும் செய்யவில்லை. தாண்டனோடு, சண்டை மூண்டு விடுமோ என்ற சந்தேகத்தால், உத்திரபிரதேச நடவடிக்கைகளில், எதிலுமே ஈடுபடாத அவர், இதிலேயும் வாய் மூடிக் கிடந்தார். ஆனால், இப்பொழுது நாட்டின் பிரதமராயிற்றே அவர்!

இவர்கள் பேசுவதோ, ஏக இந்தியா! வெளிநாடுகள் உணவுதரா மலிருக்கின்றன என்கிற பொழுது தாண்டிக் குதிக்கின்றனர்! ஆனால் மாகாணத்திற்கு, மாகாணம் செய்த துரோகத்தை கண்டிக்கவில்லை.

இதிலிருந்து ஏக இந்தியா கொள்கையில் தாண்டன் காட்டும் அக்கரையைவிட, மாகாண பித்தம் அதிகம் கொண்டவர் என்பது நன்கு தெரியும்!

சொந்த நாட்டைக் கேட்கும் நம்மை, நாட்டைப் பிரிக்கும் நாசகாலர்கள் என ஏசுகிறார்கள்.

இவர்கள், மாகாண மனப்பான்மையோடு, ஓர வஞ்சனை செய்கிறார்கள். இதைக் கேட்பாரில்லை!

நேருவுக்குத் தாண்டனின் கொள்கைகள் பிடிக்காதவை என்று மட்டுமல்ல, தாண்டனை தலைவராக என்றுமே ஏற்க அவர் மனம் ஒப்பவில்லை.

ஆகவேதான், காங்கிரஸ் தலைவர் தேர்தலின் போது இரண்டு கூடாரங்கள் ஏற்பட்டன.

தாண்டனுக்காக, பட்டேல் படை திரட்டினார், நேருவின் நினைப்பறிந்தோ, அறியாமலோ! ஆகவே, இதனை எதிர்க்க முடியவில்லை. தாண்டனை எதிர்த்தால், பட்டேலை எதிர்ப்பதுபோல! ஆகவே, மறைமுகமாக, தாண்டன் தலைமை கூடாதெனக் கூறவேண்டியவரானார்.

பட்டேல் ராஷ்டிரபதி பதவி தேர்தலில், தாண்டன் வெற்றிபெற எல்லா ஏற்பாடுகளும் பூரணமாகச் செய்துவிட்டார். ஆகவே, நேரு பட்டேலை நெருங்கவும்முடியவில்லை!

பட்டேல் தாண்டன் பக்கம், நேரு கிருபளானி பக்கம் என்று இருமுகாம்கள் என்பதையே, மறைக்க முனைந்தார், நேரு!

எப்படியோ, தாண்டன் தலைவரானார்.

அதிலிருந்தே, தன் நெடு நாள் ஆசையை நிறைவேற்ற சந்தர்ப்பம் பார்த்து வந்தார் தாண்டன்.

நேரம் கிடைத்தபோதெல்லாம், நேருவுக்கு நேர் விரோதமான காரியங்கள் செய்திடத் தொடங்கினார்.

பட்டேல்—நேரு உறவு வரவர குறைந்திட ஆரம்பித்தது.

இவர் வீட்டிற்கு அவர் வந்தார் அரைமணி நேரம் பேசினார். அவர் மாளிகைக்கு இவர் போனார். ஒரு மணி நேர சம்பாஷணை என்ற பத்திரிகைச் செய்திகள் குறைந்து, கடைசியில் இல்லாமல் போயின.

இந்த நேரத்தில்தான், நமது ஆச்சாரியாரை, இலாக்கா இல்லாத மந்திரியாக டெல்லிக்கு அழைத்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை

யாத்திரை

4

பார்த்திபனுக்கு

தினகரன்

இரண்டு நாள் பழக்கத்திலேயே நாம் நெருங்கியவர்களாகிவிட்டோம் என்பதை தாங்கள் மறக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தொடுகின்றன, என் வார்த்தைகள் சில இடங்களில்—சீறுதீர்! அனுபவசாலியின் ஆலோசனை அவை என்று ஏற்றுக்கொள்ளுங்கள்!

அன்று தங்களிடம் 'சள,புள' வெனப் பேசினேன். தங்களைப் பலநாள் தெரிந்து பழகியவன்போலவே நடந்துகொண்டேன். நீங்கள் சற்று வெறுப்படைந்திருக்கலாம். வியப்பாகக்கூட இருந்திருக்கும். அப்படி நடிக்கவேண்டியிருக்கிறது. உலகு இன்று போலிகௌரவத்தில் பெருமதிப்பு வைத்திருக்கிறது. அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நான் தெரிந்தவன்போலப் பேசத் தொடங்கியதுமே உலகந்தெரிந்த பிள்ளையாக இருந்தால் 'உங்களைத்தெரியவில்லையே...' என்று சொல்லியிருக்கமாட்டீர்கள். அதனால் நான் வருந்தவுமில்லை. அதனைப் பெரிதாக மதிக்கவுமில்லை. ஆயிரந்தடவைகளில் அதுவும் ஒன்று! மச்ச வியாபாரி நான்—துர்காற்றத்திற்கு அஞ்சி என்ன செய்வது?

நீங்கள் வாதாட வந்திருந்த வழக்கு விசித்திரமானது. இராமன் என்ற மைனரின் சொத்துக்குப் போட்டி......... தாயத்தார்களுக்குள் தகராறு! அதை முடித்து வைக்க வந்து சேர்ந்தீர்கள் தாங்கள்! இராமன் உங்களுக்கு வேண்டியவன் இல்லாவிட்டால் இந்தவழக்கிற்குத் தாங்களே வரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கமாட்டான். அவன் கொஞ்சம் முரடன்... 'சண்டி'!... ஆகவே அவன் விருப்பப்படி வழக்கிற்கு தாங்கள் வெகு தொலைவில் வாழ்ந்தாலும், உங்களையே வரும்படி ஏற்பாடு செய்தார்கள். அவன் ஏன் உங்களையே விரும்பினான் என்று முதலில் எனக்குப் புரியவில்லை. பிறகு 'துப்பறியும்' சாம்பு ஆனேன். காரணம் தெரிந்துவிட்டது. அந்த ருசிகரமானபகுதியைப் பிறகு சொல்கிறேன். இப்பொழுது கொஞ்சம் 'சுயபுராணம்' வாசிக்கிறேன். என்னைத் தவறுதலாக நினைத்துவிடாதீர்கள். அது என் சுபாவம்—இயற்கைப்போக்கு என்று எண்ணுங்கள்.

தில்லை—வில்லாளன்

அன்று தாங்கள் வழக்காடிய முறையிலிருந்து தங்கள் அறிவுத் தெளிவிலே அதிக அழுத்தமான நம்பிக்கை பிறந்துவிட்டது எனக்கு! என் வாழ்க்கையில் ஒரு 'அழும்புக்கார' நிகழ்ச்சி நடந்துவிட்டது. அது இருட்டறையோடு முடிந்துவிடும் என்று தவறுதலாகக் கணக்குப் போட்டேன். அது தவறு படித்த பெண்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் போல! நாம் நேர்மை சம்மட்டியால் நமக்கு விருப்பமான உருவங்களாக அடித்துக்கொள்ளலாம். நாம் 'ஜகஜ்ஜாலப்புரட்டை' ஆரம்பித்தால் நம் உடலெங்கும் சூடுபோட்டுக் கொள்ளவேண்டியதுதான்! அந்த அநீதியான செயல் அறங்கூறவைக்கு வந்துவிட்டால், அடியேன் தப்பிக்க ஏதாவது விதிமுறைப் புத்தகத்தில் இடமிருக்கிறதா என்று தெரிந்துகொள்ளவேண்டும். அதற்கு உங்கள்உதவிவேண்டும். அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்வோம்.

தினகரனை இன்றைய உலகம் சரியாகப் புரிந்துகொண்டுள்ளது. ஆனால் உலகத்தைச் சரியாக உணர்ந்துகொள்ளாத சில எடுதாங்கிகள் ஏளனமாகப் பேசுகின்றன! அவைகள் வாழத்தெரியாத வக்கிரங்கள்! வாழ வழியிருந்தும், பழி, பிழை,......அது, இது என்று சொல்லி நல்ல பாதையை விட்டு நழுவியோடும் விசித்திரப் பிறவிகள்!

உலகில் ஆண் பெண் என்ற இரண்டு பெரும் பிரிவு உண்டு. ஆம், அது இயற்கை! அதுபோல உலகில் இரண்டுவகை மக்கள் இருக்கிறார்கள்; வாழத்தெரிந்தவர்கள், வாழத் தெரியாதவர்கள் என்று அவர்களைப் பெயரிட்டழைக்கலாம்! என்னைக் குறைகூறுகிற 'சிறுபிள்ளைகளில்' பலர் இந்த இரண்டாம் ரகப் பேர்வழிகள்! அவர்கள் தாங்களும் வாழமாட்டார்கள். பிறர் வாழ்வதையும் பொறுக்கமாட்டார்கள்.

ஓடிய கதை

பத்மாவை இழந்த சுந்தரம், வாழ்வையே வெறுத்து, பொதுத் தொண்டே, இனி வாழ்வின் இலட்சியம் என பணிபுரிந்து வருகிறான்.

பத்மாவோ, பார்த்திபனை மணந்து, வாழ்விலே இன்பங் காணாது தவிக்கிறாள்.

பார்த்திபனோ, பொன்னியிடம் மனதைப் பறிகொடுத்துவிட்டு மனைவி பத்மாவிடம் பொய்நேசங் காட்டிவருகிறான். பொன்னி கருவுறுகிறாள், ஆகவே விஷயம் வெளியாகிறது. பத்மா புரட்சிகரமான பரிகாரந்தேடுகிறாள். பொன்னியைத் தன் கணவனுக்கு மணம் முடித்து வைத்துவிட்டு, மருத்துவ படிப்புக்கென காரணங்கூறி வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

பத்மாவின் தங்கை லீலா, தன்காதலை இராமன் என்ற வாலிபனுக்கு காணிக்கையாக்குகிறாள்.

அவள் தோழி மங்கை தினகரன் என்ற தெகிடுதத்தக்காரனால் கற்பழிக்கப்பட்டு, அதன்பின் பள்ளியாசிரியையாகவே காலங்கழித்து வருகிறாள்.

இந்த நிலையிலே..........

அவர்களை உலகம் அறியா சிறு குழந்தைகள் என்று மன்னித்து வருகிறேன் நான்.

மனிதன் ஏன் பிறக்கிறான் உலகில்? வாழத்தான்! பின் ஏன் தயக்கம்? வாழ முயற்சி செய்யவேண்டியதுதானே முறை......! அந்த முயற்சியில் இறங்கியுள்ள என்னைப் பற்றி அவதூறு பேசுகிறார்கள்காலிகள், தறுதலைகள்! நான் 'பெரியமனதோடு' விட்டுவிடுகிறேன். வாழப் பிறந்த மனிதன் ஒழுக்கம், நேர்மை அறம், கடமை என்று சொல்லி வாழ்விழந்து தாழ்ந்துபோவதா? இதனை என்னால் ஏற்கமுடியாது. கடமையாம்......மனிதன் அன்றாடமென்று துப்புகிற வெற்றிலைபாக்கு, புகையிலையைவிட, புகைத்துத்தள்ளுகிற சுருட்டு, பீடி, சிகரெட்டைவிட அதிக மதிப்பை அதற்குத்தர நான் விரும்பவில்லை.

ஒழுக்கம், நீதி, நேர்மை....இவைகள் வாழத் தெரியாதவர்கள் தாங்களே தங்களுக்கு மாட்டிக்கொள்கிற விலங்குகள்!

ஒழுக்கம் ஒரு சிறைச்சாலை, நீதி, நேர்மை என்பன சிறைக்கூடத்தின் இரண்டு பெரும் இரும்புக்கதவுகள். கடமை அதில் மாட்டியுள்ள பெரிய பூட்டு! இதற்குள் மாட்டிக்கொள்கிறான் மனிதன். அவன் வாழத்தெரியாதவன்; ஆகவே வாடுகிறான். வேதனைகீதம் பாடுகிறான். சுகத்தையிழந்து சோகப் பாதையிலே ஓடுகிறான்!

நான் இவைகளைக்கூடாது என்று சொல்லவில்லை. ஏன்? உலகின் புறக்கண்களில்மட்டும் நாம் இவைகளுக்குக்கட்டுப்பட்டவனாகக் காட்டிக்கொண்டால் போதும். அதற்காக வாழ்வை முறித்துக்கொள்கிற முட்டாள்தனத்தைப்பாராட்ட என்னால் முடியாது.

இராமனின் வழக்கை எடுத்து மணிக்கணக்கில் ஆராய்ச்சி செய்திருப்பீர்கள், அவையிலே கொட்டியளக்கமட்டும் குறிப்புகள் தேடி அலுத்திருப்பீர்கள். எப்படியோ வெற்றியையும் வாங்கித் தந்துவிட்டீர்கள். தாங்கள் பெற்ற பணம் 'பர்சை' அடைவதுடன் அந்த நிகழ்ச்சியைமறந்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற போதனைகளும் கிடைக்கும். திரும்பி நினைத்துப்பாருங்கள்.

இராமன் தந்தை தானப்பர் திடீரென்று மாரடைப்பால் இறப்பார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர் முடிவு அவ்வளவு விரைவில் வந்துவிட்டது. அவர்தன் உழைப்பால் சேகரித்த சொத்துக்களை தன் மனதில் பட்டபடி எழுதி வைத்துவிட்டார்.

அவருக்கு இரண்டு மனைவிமார். மூத்தவள் பெற்றபிள்ளைஏகாம்பரம் இளையவன் வழியாகக் கிடைத்த பிள்ளைச் செல்வம்தான் இராமன். பங்காளிச்சண்டையிலே கொண்டு வந்துவிட்டது, அவர்எழுதிவைத்து விட்டுப்போன மரண சாசனம் — சாவுநேரத்தில் ஏற்படுத்திய'உயில்'- சொத்து நிர்வாகத் திட்டம்.

தானப்பருக்கு ஏகாம்பரத்தை இளமையிலிருந்தே பிடிப்பதில்லை. தந்தைக்குப் பிள்ளையிடத்து அன்பு இல்லை—பிள்ளைக்குமட்டும் அன்பு, உண்டு, அளவில் அதிகம் இல்லாவிட்டாலும்! வீட்டிற்கு மூத்த பிள்ளை — ஆகவே குடும்ப நிர்வாகத்தை அவனே கவனிக்க வேண்டும். வயதேறிய தந்தைக்குப் பணிவிடைகள் செய்வதிலும் குறையவில்லை. தானப்பர் முன்கோபி. சிறு செயல்களுக்கெல்லாம் கோபிப்பார். ஏகாம்பரம்மட்டும் எதிர்த்துரையாடமாட்டான். ஏனெனில் அவன் தந்தையின் 'சுடுமூஞ்சி'சுபாவத்தை அறிவான். அவ்வளவு கடுகடுப்பாக இருக்கிறவர் உண்மையாகவே அவனுக்காக ஆயிரக்கணக்கில் செலவிட்டுப்படிக்கவைத்தார். அவன் ஏகாம்பரம் எம். பி., பி. எஸ். ஆக எவ்வளவு வெள்ளிப்பணங்களை அள்ளி வழங்கியிருப்பார்! சளைக்காமல் தந்திருக்கிறார். அதுமட்டுமா? அவனுக்கு தனியாக 'இன்பமாடம்' என்ற மருத்துவ விடுதி ஏற்படுத்திக்கொடுத்தார். ஏகாம்பரம் காசநோய்ச்சிகிச்சையிலே கைவந்த நிபுணன்; கரைகண்ட கலைஞன்! அவனிடம் வந்து இதயசுத்தி பெற்றுத் திரும்புபவர் பலர் பழனிக் காவடி சுமந்திடுவோரைப்போல.... பணமும்தருவர்! ஏகாம்பரம்தருவது சுவாச சிகிச்சை......இங்கோ வெங்கடேசலனும், வேலாயுதபாணியாரும் தருகிற ஏமாற்றம்போல் அல்ல!

தானப்பரின் பிள்ளைபாசம் அதுவரை மடியவில்லை. வந்தாள் ஒரு வனிதாமணி ஏகாம்பரத்தின் வாழ்க்கைத்துணைவியாக......பிள்ளைக்கும் தந்தைக்கும் இடையே பிளவு ஏற்பட்டது......வளர்ந்தது......இடைவெளி அகலமாகிக்கொண்டே போயிற்று! பாலம் அமைக்கமுடியவில்லை. ஏகாம்பரத்தின் மனைவி எழிலாள் அப்படியொன்றும் துடுக்குக்காரியுமில்லை. படித்தவள், பட்டம் பெற்றவள். பண்பட்ட உள்ளங்கொண்டவள். இருந்தாலும் தானப்பரின் இதயத்தைத் தொடமுடியவில்லை. இரண்டு மனைவிகளையும் இழந்துவிட்ட தானப்பர் தன் இளையாளின் மகன் இராமனுடன் வெளியேறிவிட்டார். அவனோ அரசியல் சுழலில் அடிக்கடிச் சிக்கி அவதிப்பட்டான். தந்தையின் புத்திமதிகளுக்கு மெத்தமதிப்பு தந்தால் அவர் உடைப்பட்டுப்போன மூத்த நெஞ்சு ஏக்கப்பாறையில் மோதி நொறுங்காமல் இருந்திருக்கும். அவனது அடங்காப் பிடாரித்தனமே அவர் சாவை மிக அருகில் கொண்டுவந்து நிறுத்தியதுபோலும்! சாகும்பொழுது அவர் எல்லா சொத்துகளையும் இராமனுக்கே எழுதி வைத்துவிட்டார்! ஆகவே தான் ஏகாம்பரம் வழக்கு தொடுத்தான். இராமன் இதயமுள்ளவன், இரக்கம் அதில் குடியிருந்ததும் உண்மை இருப்பினும் நிலைமை அவனை எதிர் வழக்காட வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளிவிட்டது! அதற்காக உங்களை அழைத்தான். வந்தீர்கள், வழக்காடினீர்கள் — வெற்றியும் வாங்கித் தந்தீர்கள்.

வழக்கறிஞரே, சிந்தியுங்கள்!

ஏகாம்பரம் நல்லவன் — ஆனால் பெற்ற தந்தையால் புறக்கணிக்கப்பட்டவன். எப்படி? ஒருபக்க நியாயங்களையே அலசியிருப்பீர்கள், ஆகவே ஏகாம்பரம் சொன்னவைகளை நான் சொல்கிறேன் கேளுங்கள். அவன் என்நண்பன். என்னைக் கட்டிக்கொண்டு அழுதான்.

(தொடரும்)

Edited, Printed & Published by C. N. Annadurai M A at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.